2. அறிவிப்பு (தொடர்ச்சி)

(ஈ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 12-2-1980 பகல் சுமார் 12-50 மணிக்கு பார்வையாளர் மாடத்திலிருந்து திரு. கோ. செல்வம், திரு. ஏ. ஜோசப் மற்றும் திரு.ஜே. அமரேந்திரன் ஆகியோர் கோஷங்கள் எழுப்பி, துண்டுப் பிரசுரங்களை பேரவையில் வீசியுள்ளனர், அவர்கள் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது.

அவர்களது இச்செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

3. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

(ஆ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை குறித்து

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :-

"இன்று 12-2-1980 பகல் சுமார் 12-50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டு துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள சென்னை-7, வடமலைப்பிள்ளை தெரு, 59 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. கோவிந்தசாமி அவர்கள் மகன் திரு. கோ. செல்வம் என்று கூறிக் கொள்ளும் நபரும், சென்னை-12. ஓட்டேரி, பிரிக்லின் ரோடு, 162 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. ஏ. டி, அந்தோணி அவர்கள் மகன் திரு. ஏ. ஜோசப் என்று கூறிக்கொள்ளும் நபரும், சென்னை-7, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, 152 ஆம் எண் வீட்டில் குடியிருக்கும் திரு. வால்டர் அவர்கள் மகன் திரு. ஜே, அமரேந்திரன் என்று கூறிக்